# மங்கல அணியின் மாட்சி

**இரா.சரஸ்வதி**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
கரூர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

ஐவகையான காலங்களில் பொற்காலமாகக் கருதப்படுவது சங்க காலமாகும். அக்கால மக்களது பழக்கங்களே நாளடைவில் நன்மதிப்பினைப் பெற்று வழக்கங்களாயின. பொற்கால மக்களது எச்சங்களே இன்று பண்பாடாகப் போற்றப்படுவதால் அக்காலத்தினைப் பொற்காலம் என வழங்கியது பொருந்துதற்குரியதாகும்.

தமிழர் மக்களது பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கை வட்டச் சடங்குகளில் மிகவும் சிறப்புப் பொருந்திய மங்களகரமான சடங்கு எனில் அது திருமணச் சடங்காகும். திருமணம் என்பது ஒவ்வொரு மனித வாழ்விலும் முக்கிய பங்கு வகிக்கிறது. பலரது வாழ்வே திருமணத்திற்குப் பிறகுதான் தொடங்குகிறது எனில் அது மிகையாகாது.

'திரு' என்பதற்குத் தெய்வத்தன்மை என்றும் 'மணம்' என்பதற்கு மதிப்பு, நன்னிலை எனவும் பொருள்படும். இங்கு தெய்வத்தன்மை என்பது குணம், உருவ ஒற்றுமையால் தெய்வம் உருவம் கொண்ட மனிதர்கள் என்பதாகும். இவ்வாறு இறைகுணம் கொண்ட இருவர் நம் சமுதாயத்தாரால் மதித்து ஏற்றுக்கொள்ளப்பட்டு அடுத்த நிலைக்கு உயரும் தருணத்தையே 'திருமணம்' என்று வரையறுக்கின்றோம். இதற்கு அணி செய்யும் வகையில் "தமிழர் வாழ்வில் திருமணம் என்னும் நிகழ்வானது ஒரு மனிதனுக்குச் சமூகத் தகுதியும், சடங்கியல் வாழ்வில் பங்கேற்கும் உரிமையையும் கொடுக்கிறது."[1] என்று உரை அமைகிறது. இத்தகு திருமணத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மங்கல அணியாம் மாங்கல்யத்தில் சிறப்பினை பின்வருமாறு அறியலாம்.

### திருமணச் சடங்குகள்

சங்ககாலத் 'திருமணம்' மற்றும் அவற்றில் நடதப்பட்ட சடங்குமுறைகளைச் சங்க இலக்கியங்கள் தெரிநிலையாகவும் குறிப்பாகவும் பல இடங்களில் இயம்பி வருவதை உணரலாம்.
அவை,

1. நல்ல நாள் பார்த்தல்
2. சிலம்பு கழி சடங்கு
3. திருமண உறுதி விழா
4. இல்லுறை தெய்வத்தை வணங்குதல்
5. பரிசம் கொடுத்தல்
6. பந்தலிடுதல்
7. வதுவை நீராட்டு
8. அக்னியை வணங்குதல்
9. மாங்கல்யம் அணிதல்

10. சுற்றம் பேணல்
11. தலைநாள்
12. இல்லாளின் முதல் உணவு

முதலியவையாகும்.

இவ்வாறு நடத்தப்படும் திருமணச் சடங்குகளில் முக்கியத்துவம் பெறுவது 'மங்கல நாண்' அணியும் சடங்காகும். இம்மங்கல நாணானது தனது பெயரினைக் காலத்திற்கு ஏற்றார் போல, ஈகை அரிய இழையணி, மங்கல்யம், மங்கல நாண், மாங்கல்யம், தாலி என்று மாற்றிக் கொண்டாலும் அதன் மகத்துவம் குன்றாமல் மாட்சிமை பெறுகின்றது.

**மாங்கல்யத்தின் மாட்சி**

வதுவை, நன்மணம், வதுவை விழா, கடிமணம் என்று சங்க காலத்தினால் திருமணம் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டது. இத்திருமணத்தில் நிகழ்த்தப்படும் ஒவ்வொரு சடங்கும் வதுவையானவளை இல்லாளாக உயர்த்திட மேற்கொள்ளப்படும் மங்கல சடங்குகள் ஆகும். இதில் மிகவும் முக்கிய தருணமாக மாங்கல்யம் அணியும் சடங்கு அமைகிறது. இதனை சங்க காலத்தில் ''ஈகை அரிய இழையணி'' என்று குறிப்பிட்டனர்.

**"ஈகை அரிய இழைஅணி மகளிரொடு**
**சாயின்று என்ப ஆஅய் கோயில்"[2]**

என்ற புறநானூற்று வரிகளின் மூலம் இச்சொல்லாட்சி சங்க காலத்திருந்தமை புலனாகிறது.

கடைஏழு வள்ளல்களில் ஒருவரான ஆய் அண்டிரன் தன்னிடமிருந்த செல்வங்களையெல்லாம் வறியவர்களுக்கு இல்லையெனாது கொடுத்து, இறுதியில் தானும் வறுமையுற்றான். அத்தகு கொடிய வறுமையிலும் கொடுத்தற்கு அறிய பொருளாக 'ஈகையரிய இழையணி' இருந்தது என்பர்.

அவ்வாறே அரசமாதேவியும் தனது மணாளனைப் பிரிந்த காலத்தில் புனையா ஓவியமாக நின்ற நிலையில் 'மங்கல நாணினை' மட்டும் நீக்கவில்லை என நெடுநல்வாடையும் குறிப்பிடுகிறது.

**"ஆரம் தாங்கிய அலர்முலை அகத்துப்**
**பின்அமை நெடுவீழ் தாழ துணை துறத்து"[3]**

என்ற வரிகளில் 'நெடுவீழ் தாழ' என்ற சொல்லானது மங்கல நாணினைக் குறிப்பால் வெளிப்படுத்தியதை அறியலாம். அரசனைப் பிரிந்த நிலையில் அரசமாதேவி பட்டாடையினைத் துறந்து பாலாடையையும், ஆபரண அணிகலன்களை எண்ணாது, மெய்பிரியா அணியாக தம் கழுத்தில் குத்தும் தன்மைக் கொண்ட, தொங்கும் நீண்ட தாலிநாண் ஒன்றினை மட்டும் அணைந்திருந்தாள் என்பர். இதிலிருந்து எத்தகைய சூழலாக இருந்தாலும் 'தாலிநாணினை' நீக்குதல் ஆகா என்ற பண்பாடு புலனாகிறது. மேலும் 'தாலிநாணானது' குத்தும் தன்மை கொண்ட அணியாக இருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

அம்மி மிதிப்பதற்கும், அருந்ததி பார்ப்பதற்கும் ஓர் அர்த்தம் உண்டோ அதுபோல குத்தும் தன்மை கொண்ட அமைப்பில் மங்கல அணி அமைக்கப்பட்டிருப்பதிலும் ஓர் உள்ளுரை உள்ளது. அவ்வாறே, கழுத்தில் தொங்கும் தன்மை கொண்ட தாலிநாண் நீண்டு தொங்காது மார்பின் மையத்தில் மையமிட்டதற்கும் ஓர் அர்த்தம் உண்டு. இன்றளவும் மாங்கல்யமானது குத்தும் தன்மை கொண்ட அணியாக இருப்பதை அறியலாம்.

புராணங்களில் ஒன்றான அரிச்சந்திர புராணத்திலும் தாலி பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இழப்பதற்கு இனி எதுவும் இல்லை என்ற இல்லாமையே சந்திரமதிக்கு எல்லாம் ஆன நிலையில், இழப்பதற்கு ஒன்று உண்டு என்பது போல இணையில்லா இழப்பாக இறுதியில் சந்திரமதி தன் மகனையும் இழக்கின்றாள். இழந்தவனை நல்லடக்கம் செய்ய மயானம் செல்கிறாள். இறுதி சடங்கிற்கு புலையன் கூலிகேட்க தன்னிடம் ஒன்றும் இல்லை என மெய்யுரைக்கிறாள்.

**'கழுத்தில் செம்பொன் மங்கல நாண் இருக்க**
**ஏதும் இல்லை என பொய்யுரைக்கிறாயா?'**

என்றான் புலையன். இடியுண்ட மஞ்ஞையான சந்திரமதி, கொண்டவன் கண்ணுக்கு மட்டும் புலனாகும் என் பொன் அணி. கண்டவர் கண்ணுக்குப் புலனாக என மருண்டு வந்தவன் தன் மணாளன் என தன்னுள் தெளிந்து அமைதி கொள்கிறாள்.

**“செம்பொன் மங்கலநாணன் கழுத்திகிருக்க வேதும்**
**இல்லை எனச் சொல்லுவது. . . . . . . . . . . . .”** **(புராணம் – 1018)**
**“அலைவிலா அரிச் சந்திரற் கல்லாது**
**தொலைவில் யாவர்க்கும் தோற்றரு மங்கலம்”** **(புராணம் – 1018)**

இத்தகு குறிப்புகளைக் காணும் பொழுது மாங்கல்யம் என்பது பிறருக்குக் கொடுத்தற்கு அரிய அணியாக மட்டும் அமையாது. கொண்டவன் அல்லாது பிறர் காணுதற்கு அமையாத அணி என்பதும் தெளிவாகிறது. அவ்வணியானது மங்கையரின் மார்பினை விட்டு நீங்காத தன்மை கொண்ட மங்கல அணி என்பது புலனாகிறது.

இத்தகைய சிறப்பு பொருந்திய ‘மங்கல நாண்’ பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு காணப்படினும், அதனைத் திருமணத்தின் பொழுது அணிந்ததற்கான குறிப்புகள் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. ‘அக இலக்கியங்களில் சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறார் என்ற மரபு பின்பற்றப்படுவது போல, பிறர் அறியக்கடவாது தன் கணவர் மட்டும் காணும் தன்மை கொண்ட சிறப்புப் பொருந்திய அணியானததால், இவ்வணி அணியும் சடங்கு இடம்பெறவில்லை எனலாம். சங்க இலக்கியங்களில் ஈகை அரிய இழையணி பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. என்றால், அதை அணிந்ததற்கான சடங்குகளும் இடம்பெற்றிருக்க வேண்டும். எனில் அகமரபு காரணமாக இடம்பெறாது இருந்திருக்கக் கூடும்.

**மாங்கல்யம் பற்றிய குறிப்பு**

மஞ்சள் தாவரத்தினது செடி, கிழங்கு கட்டி, பொடி அனைத்தும் மங்கல சடங்கின் பொழுது இடம்பெறும் முக்கிய பொருள்களாகும். எனவேதான் ‘வதுவையை நீராட்டும் பொழுது மஞ்சள் கலந்த நீரினைக் கொண்டு நீராட்டுகின்றனர். மஞ்சளினது மகிமையின் காரணமாகவே ‘அம்’ என்ற பெருமை விகுதி பெற்று மஞ்சள் – மங்கலம் ஆனது என்பர். மஞ்சள் என்ற சொல் நீராட்டும் பொழுது ‘மஞ்சனம்’ என்றும் அழகினைக் குறிக்கும் பொழுது ‘மஞ்சுளம்’ என்றும் மாறுவதை அறியலாம்.

1. மஞ்சுதல் (நீராட்டுதல்) = மண்ணுதல் ஆனது போல
2. மஞ்சனநீர் = மண்ணுநீர் ஆனது போல
3. மங்கலம் = மணம், திருமணம் ஆனது போல
4. மங்கல நாள் = திருமண நாள் ஆனது

எனலாம். இவ்வாறு திரிந்த சொற்கள் அனைத்தும் மஞ்சள் எனும் தன்மையை உள்ளடக்கி உணர்த்தியதை அறியலாம். இச்சொற்களினது ஆட்சியின் மூலம் மஞ்சள் கட்டி அல்லது மஞ்சள் குளித்த கயிறு, மாங்கல்யமாக இருந்திருக்கக் கூடும் எனலாம்.

சிலம்பினது மங்கல வாழ்த்துப் பகுதியும் குறிப்பிடுவது, கோவலன் கண்ணகி இருவரது திருமண நிகழ்வையே ஆகும். இவ்விலக்கியப் பதிவுகள் மூலம் திருமணத்திற்கும், மங்கலத்திற்கும் ஒரு உள்ளார்ந்த தொடர்பு இருப்பதை அறியலாம்.

**“முரசு இயம்பின் முருடு அதிர்ந்தன் முறைஎழுந்தன பணிலம் வெண்குடை**
**அரசு எழுந்ததொர் படி எழுந்தன் அகலுள் மங்கல அணி எழுந்தது”**

என்னும் வரிகளானது, திருமண மூன்றே முக்கால் நாழிகை நிகழ்வினை, கண்முன் காட்சியாக்குகின்றன. இதில் ‘அகலுள் மங்கல அணி எழுந்தது’ எனும் சொல்லானது ‘மங்கலநாண்’ அவையில் வெளிபட்டதை குறிப்பால் உணர்த்துகிறது. அவையுள் அதுவரை எழுந்த மங்கல அணியானது மங்கைக்கு அணிவிக்கப்படும் பொழுது, பண்பாடு அடிப்படையில் மரபு காரணமாக இலக்கிய வகையில் மறைக்கப்பட்டிருக்கலாம். இதனை நோக்கும் பொழுது சங்க காலத்தில் ஈகை அரிய இழையணியாக இருந்த நாணானது, சங்க மருவிய காலத்தில் மங்கல அணியாக மாறி மாங்கல்யம் ஆனதை அறியலாம்.

**தாலி பற்றிய குறிப்பு**

'தாலபத்திரி' என்பதற்கு 'மரமஞ்சள்' என்று பொருள். இம்மரமஞ்சளைக் கொண்டு அமைந்த மங்கல அணியே பிற்காலத்தில் 'தாலி' என்று மாறியிருக்கக்கூடும். காதணியை 'தாலபத்திரம்' என்று கூறுவது போல, மரமஞ்சளால் அமைந்த தாலபத்திரியை கழுத்தணியாக அணிந்திருக்கக் கூடும். தாலபத்திரியே பிற்காலத்தில் சுருக்கெழுத்தாகச் சொல்வழக்கில் 'தாலி' என்று மாறியிருக்கக்கூடும் எனினும் சொல்வழக்கில் அமைந்த

1. ஈகை அறிய இழையணி - நூலணி
2. மங்கல அணி, மங்கல நாண் - மஞ்சள் அணி
3. மரமஞ்சள் - தாலபத்திரி
4. தாலபத்திரி - தாலி

என்று அமைந்த அனைத்து சொற்களும் குறிப்படும் ஒரு பொருளாகத் 'தாலி' என்பது மஞ்சள் கிழங்காகவோ அல்லது மஞ்சள் கயிறாகவோ அமைந்த அணி என்பது தெளிவாகிறது. இச்சொல்வழக்கானது திராவிட இனக்குழுவின் வருகைக்குப்பின் தோன்றியதாக தேவிரா அவர்கள் தனது தமிழ் இலக்கணம் எனும் படைப்பில் குறிப்பிடுகிறார்.

**தொகுப்புரை**

சங்க காலம் தொட்டு இன்று வரை மனித வாழ்வில் பல மாற்றங்கள் தோன்றியுள்ளன. அதில் மாறாத் தன்மை கொண்ட வழக்கங்கள் பண்பாடாக நிலைக்கின்றன. மாதா, பிதா, குரும் தெய்வம் என்ற நிலையில் முதன்மை பெற்ற தாய், தான் பெருமை கொள்ளும் தருணம் இரண்டாகும். மணாளன் கையால் மங்கலம் பெரும் தருணம், மற்றொன்று பிள்ளைப்பெறும் தருணம் ஆகும். எனினும், உந்திக்கொடி பந்தத்தைக் காட்டிலும் தாலிக்கொடி பந்தமானது சக்திவாய்ந்ததாகும். திருமணத்தின், ஒன்று திரண்ட சக்தியாக மாங்கல்யம் அமைகிறது. இதனை ஒரு சிறிய நாணில் அடக்கிய நம் தமிழரது பெருமை பறைசாட்டுதற்குரியதாகும். பொற்காலம் தொட்டுப் போற்றப்படும் பொன் நாணாம் மங்கல அணியானது மங்கையருக்கு மட்டும் பெருமையல்ல. நமது பண்பாட்டிற்கும் பெருமை சேர்ப்பதாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. பக்தவச்சலபாரதி. மானிடவியல் கோட்பாடுகள் - ப.296
2. புறநானூறு - பா.எண். 127 (5-6)
3. நெடுநல்வாடை - பா.எண். 136 – 137